செ.வெ.எண்: 431 நாள்: 08.07.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்தடி நீரை மேம்படுத்துவது குறித்த மத்திய குழுவின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (08.07.2019) மத்திய அரசின் ஜல் சக்தி அபியான் எனும் நிலத்தடி நீரை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மத்திய அரசால் நிலத்தடி நீர் மட்டம் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, கீரமங்கலம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நிலத்தடி நீர் மட்டத்தின் தற்போதைய இருப்பு குறித்தும், இதனை மேம்படுத்துவதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், ஆய்வு செய்ய மத்திய உணவு, பொது விநியோகத்துறை பொருளாதார ஆலோசகர் மற்றும் இணை செயலர் திருமதி.மணிஷா சென்ஷர்மா, மத்திய உணவு, பொது விநியோகத்துறை துணை செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திருமதி.ஆலிஸ் ரோஸ்லின் டேடே, மத்திய நிலநீர் வாரிய தொழில்நுட்ப அலுவலர் திருமதி.சந்தியா யாதவ் ஆகியோரால் மாவட்ட ஆட்சியரகத்தில் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலம் நீடித்த அமைப்புடன் நீர் பாதுகாப்பு மற்றும் சிறந்த நீர்ப்பாசனம் செய்து இந்தியாவை மீண்டும் நீர் வளம் மிக்கதாக உருவாக்கிட ஜல் சக்தி அபியான் என்ற புதிய இயக்கத்தினை ஜூலை 2019 மாதம் முதல் இரண்டு கட்டங்களாக அனைத்து மாநிலங்களிலும் செயலாக்கம் செய்யப்பட்டு பருவ மழை குறைந்துள்ள நிலையில் தமிழகத்துடன் சேர்த்து 4 மாநிலங்களில் அக்டோபர் 2 முதல் நவம்பர் 2019 வரை இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இக்குழு 8.7.2019, 9.7.2019 மற்றும் 10.7.2019 ஆகிய மூன்று தினங்கள் நீர் ஆதாரப் பணிகள் பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த குழு புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் கீரமங்கலம் சரகத்தினை (பிர்கா) தேர்வு செய்துள்ளது. இக்குழுவானது திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள இதர சரகங்களான வெண்ணாவல்குடி, ஆலங்குடி, வல்லநாடு ஆகிய பிர்காக்களையும் ஆய்வு செய்ய உள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வன அலுவலர் அனந்தகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மாலதி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சுப்பையா, செயற் பொறியாளர் சேதுராமன், நகராட்சி ஆணையர் (பொ) ஜீவாசுப்பிரமணியன், உதவி திட்ட அலுவலர் சுருதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**